**இனிமையான குழந்தைகளே ! இந்த நாபாக் - தூய்மையில்லாத பாரதத்தை, பாக் - (தூய்மையாக) ஆக்கக் கூடிய சேவையில் இருக்க வேண்டும். தடைகளை நீக்க வேண்டும். மனமுடைந்து போகக் கூடாது.**

கேள்வி: இல்லற விவகாரங்களில் இருக்கையிலும், எந்தவொரு நினைவில் இருப்பது மிகவும் அவசியம் ஆகும்.

பதில்: இல்லற விவகாரங்களில் இருந்தபோதிலும் நாம் இறை மாணவர்கள், என்ற நினைவிருக் கட்டும். மாணவர்களுக்கு படிப்பு மற்றும் ஆசிரியர் எப்பொழுதும் நினைவில் இருப்பார்கள். அவர்கள் ஒரு பொழுதும் கவனக் குறைவாக இருந்து தங்களது நேரத்தை வீணடிக்க மாட்டார்கள். அவர்களுக்கு காலத்தின் மீது மிகுந்த மதிப்பு இருக்கும்..

கேள்வி: மனிதர்களிடம் இருக்கும் எல்லாவற்றையும் விட பெரியதிலும் பெரிய அஞ்ஞானம் எது?

பதில்: யாருக்கு பூஜை செய்கிறார்களோ, அவர்களையே பெயருக்கும் உருவத்திற்கும் அப்பாற்பட்டவர் என்று கூறி விடுகிறார்கள். இது எல்லாவற்றையும் விட பெரியதிலும் பெரிய அறியாமை ஆகும். முறையிடு கிறார்கள். கோவில் அமைத்து பூஜிக்கிறார்கள். பின் அவர்கள் பெயர் ரூபத்திலிருந்து தனிப் பட்டவராக எப்படி ஆக முடியும்? நீங்கள் அனைவருக்கும் பரமாத்மாவின் சத்தியமான அறிமுகத்தை அளிக்க வேண்டும்.

பாடல்: குழந்தைப் பருவ நாட்களை மறந்து விடாதீர்கள்.. .. ..

ஓம் சாந்தி. இது எல்லையில்லாத தந்தை குழந்தைகளுக்கு அறிவுரை அளித்தார் அல்லது எச்சரிக்கை அளித்தார் - எப்பொழுது இராமருடையவராக ஆகி உள்ளீர்களோ பின் இந்த குழந்தைப் பருவம் அல்லது ஈசுவரிய குழந்தைப் பருவத்தை மறந்து விடாதீர்கள். அப்படியின்றி இராமரின் குழந்தைப் பருவத் திலிருந்து விலகி இராவணன் பக்கம் சென்று விடக்கூடாது. பிறகோ மிக மிக பச்சாதாபப்பட வேண்டி வரும். ஒரு வேளை மகானிலும் மகான் மூர்க்கரைப் பார்க்க வேண்டுமென்றால் இங்கு படிப்பை விட்டு விடுபவர்களைப் பாருங்கள் என்றும் புரிய வைக்கப்பட்டுள்ளது. எனவே அவர்களது கதி என்ன ஆகும் என்பதை நீங்கள் புரிந்து கொள்ள முடியும். இங்கு இருக்கும் மகாரதிகள் யானை ஆவார்கள். அவர்களை மாயை என்ற முதலை சாப்பிட்டு விடுகிறது. இதை தந்தை முன்னால் வந்து புரிய வைக்கிறார் - இனிமையிலும் இனிமையான அருமையான குழந்தைகளே! மாயை மிகவும் கொடுமை யானது. எல்லையில்லாத தந்தையின் கையை விட்டு விடப் போகிறீர்கள் ஜாக்கிரதை. இவர் பரமபிதா. அப்பாற்பட்டு இருக்கும் பரந்தாமத்தில் இருக்கும் தந்தை பதீதபாவனர் ஆவார். அப்பேர்ப் பட்ட தந்தையின் கையை ஒரு பொழுதும் விடாதீர்கள். இல்லையென்றால் மிகவும் அழ வேண்டி வரும். நிறைய மிக நல்ல குழந்தைகள் - யாருக்கு பாபா மிகப் பெரிய பட்டம் கொடுத்துக் கொண்டிருந் தாரோ அவர்கள் கூட கையை விட்டு விடுகிறார்கள். யாராவது விழுந்து விடக் கூடாது என்பதற்காக அவர் மீது பாபா அதிகமான அன்பு செய்கிறார். பாடல் கூட பாடப்பட்டுள்ளது. அப்படியின்றி மாயை உங்களை வேகமாக இழுத்துச் சென்று விடுவது என்பதல்ல - பின் மிகவும் பச்சாதாபப்பட வேண்டி வரும். பார்க்கப்போனால் உண்மையிலும் உண்மையான யுத்தம் உங்களுடையது

ஆகும். நீங்கள் மாயை மீது வெற்றி அடைகிறீர்கள். இப்பொழுது நீங்கள் (நாபாக்) பதீத நிலையிலிருந்து (பாக்) பாவனமாக ஆகி உள்ளீர்கள். பதீத ஸ்தானத்தை நீங்கள் பாவன ஸ்தானமாக ஆக்குகிறீர்கள். பாக்-ஸ்தான் என்பதோ இங்கு இல்லவே இல்லை. இச்சமயம் முழு உலகம் நாபாக்-ஸ்தானம் ஆகும். பாவனமாக இருப்பவர்களோ தேவி தேவதைகள் ஆவார்கள். நீங்கள் (நாபாக்) பதீத பாரதத்தை பாவனமாக ஆக்கிக் கொண்டிருக்கிறீர்கள். இந்த கண்காட்சி ஆகியவை எல்லாம் நாபாக் – தூய்மை யற்றதை பாக் - தூய்மையாக ஆக்குவதற்கு ஆகும். நீங்கள் பாரதத்திற்கு உண்மையான சேவை செய்கிறீர்கள் அல்லவா? ஆம். தடைகளைக் கூட நீக்க வேண்டி உள்ளது. இதில் மன முடைந்து போவதோ, சோம்பலாவதோ கூடாது. எப்பேர்ப்பட்ட நிலைமையிலும் பதீதர்களை பாவனமாக ஆக்கக் கூடிய சேவை அவசியம் செய்ய வேண்டும். உங்களுடைய தொழிலே இது தான். வேறு எந்த விஷயங்களிலும் உங்களுடைய சம்பந்தம் இல்லை. நாம் எத்தனை பேரை நாபாக் தூய்மையற்ற நிலையிலிருந்து பாக் தூய்மையாக ஆக்கி உள்ளோம் என்று பார்க்க வேண்டும். இந்த பாரதம் சொர்க்கமாக இருந்தது. பாவன உலகமாக இருந்தது. இச்சமயம் நாபாக் மற்றும் பாக் பற்றிய ஞானம் யாருக்குமே கிடையாது. பாக் ஸ்தான் என்பதே புது உலகம் ஆகும். பிறகு பழைய உலகம் ஆகும் பொழுது நாபாக் - பதீதமாக, தமோபிரதானமாக ஆகி விடுகிறது.

எனவே ஆன்மீக தந்தை வந்து ஆன்மீகக் குழந்தைகளுக்கு நேரிடையாக புரிய வைக்கிறார். உண்மையில் நாம் பவித்திர ஸ்தானத்தை ஸ்தாபனை செய்து கொண்டிருக்கிறோம் என்பது இப்பொழுது உங்களது புத்தியில் உள்ளது. பவித்திர ஸ்தானமாக பாரதம் இருந்தது. இப்பொழுது அபவித்திர ஸ்தானமாக ஆகி உள்ளது. வீடு புதியதாக இருக்கிறது. பிறகு அவசியம் பழையதாக ஆகி விடும். இந்த அறிவு புதிய உலகத்தில் இருப்பதில்லை. படிப்பு மற்றும் ஆசிரியரை மறக்க முடியுமா என்ன? நீங்கள் கூட மாணவர்கள் ஆவீர்கள். இல்லற விவகாரங்களில் இருக்கையிலும் நாம் படித்துக் கொண்டிருக்கிறோம் என்பது நினைவில் இருக்கட்டும். இந்த படிப்பில் நிறைய காலம் பிடிக்கிறது. இடையில் ஒருவர் விழுந்து விடுகிறார். ஒருவர் தோற்று விடுகிறார். வாயால் கூறுகிறார்கள். சிவபாபா ஸ்ரீ பிரம்மா என்று எழுதவும் செய்கிறார்கள். தந்தைக்கு மிகுந்த அன்புடன் கடிதம் எழுதுகிறார்கள். நான் ஜீவ ஆத்மா, பரமபிதா பரமாத்மாவிற்கு கடிதம் எழுதுகிறேன். அவர்கள் ஹே, பரமாத்மா! காப்பாற்றுங்கள், அமைதி கொடுங்கள்! என்று முறையிட்டுக் கொண்டிருக்கிறார்கள். தந்தையைத் தவிர வேறு யாரும் அமைதி அளிக்க முடியாது. பாபாவோ வரவே வேண்டி உள்ளது. பக்தர்களின் இரட்சகர் என்றும் பாடப்பட்டுள்ளது. ஜீவன் முக்தி கொடுங்கள், சாந்தி கொடுங்கள், முக்தி கொடுங்கள். நாங்கள் உயிருடன் இருந்தே முக்தராக வேண்டும். அப்படி சத்யுகத்தில் தான் ஆகிறார் கள். இங்கோ ஜீவன் பந்தனமாக உள்ளது. இந்த விஷயங்களை நீங்கள் நல்ல முறையில் புரிந்துள்ளீர் கள். மேலும் சுயம் தந்தை புரிய வைத்துக் கொண்டிருக்கிறார். வேறு யாருடைய புத்தியிலும் நாடகத்தின் இரகசியம் இல்லை. மூன்று காலங்கள் - முதல் இடை கடை பற்றி யாரும் அறியாமல் இருக்கிறார்கள். நீங்கள் அனைத்தும் அறிந்துள்ளீர்கள். ஆனால் சாதாரணமாக மறைமுகமாக இருக்கிறீர்கள். அவர்கள் வெளியில் சென்று உடற்பயிற்சி (ட்ரில்) செய்கிறார்கள். கற்றுக் கொள் கிறார்கள். உங்களுடையது ஆன்மீக ட்ரில் ஆகும். இவர்கள் படைவீரர்கள், யுத்தம் செய்பவர்கள் என்பது

யாருக்கும் தெரியவே தெரியாது. மகாபாரதப் போரைக் காண்பிக்கிறார்கள். அது எப்படி நடந்தது? மகாபாரதப் போரை பகவான் செய்வித்தார் என்று கூறுகிறார்கள். பகவான் ஹிம்சைக்குரிய யுத்தத்தை எப்படி செய்விப்பார்? பகவான் இராவணன் மீது வெற்றி அடைவதற்கான யுத்தத்தைக் கற்பித்துள்ளார். நீங்கள் 16 கலை சம்பூர்ணமாக இருந்தீர்கள் என்று புரிய வைக்கிறார். நீங்கள் மூலவதனத்திலிருந்து அசரீரியாக வந்தீர்கள். பிறகு இங்கு உடலைத் தரித்து முதலில் சத்யுகத்தில் ஆட்சி புரிந்தீர்கள். நினைவிற்கு வருகிறது அல்லவா? ஆம் பாபா உண்மையில் நாம் தெய்வீக இராஜ்யத்தின் அதிபதியாக இருந்தோம் என்பது எங்களுக்கு நினைவிற்கு வந்துள்ளது என்று கூறுகிறீர்கள். பிறகு தோற்கடிக்கப்பட்டு விட்டோம். இப்பொழுது நாம் யுத்த மைதானத்தில் நின்றுள் ளோம். மாயை மீது அவசியம் வெற்றி அடைவோம். காமச் சிதையில் ஏறுவதால் மனிதர்களுடைய முகம் கறுப்பாக ஆகி விடுகிறது. கறுப்பு என்ற வார்த்தை கருமையானது. எனவே கரு நீலம் என்று கூறப்படுகிறது. கிருஷ்ணர் மற்றும் நாராயணருக்கு கரு நீல வண்ணம் கொடுக்கிறார்கள். அது போன்ற மனிதர்கள் யாரும் இருப்பதில்லை. மனிதர்களோ வெண்மையாக, கருமையாக இருப்பார்கள். இரும்பு யுகத்தினருக்கு கருமை என்று கூறுவார்கள். லௌகீக தந்தை கூட நீங்கள் கருப்பு முகம் செய்து கொண்டு குலத்திற்கு களங்கம் விளைவிக்கிறீர்கள் என்று கூறுவார். நீங்கள் அசுர வழிப்படி நடந்து தெய்வீக குலத்திற்குக் களங்கம் ஏற்படுத்தி உள்ளீர்கள். எனவே நீங்கள் கறுமையாக ஆகி விட்டுள்ளீர்கள் என்று எல்லையில்லாத தந்தை கூறுகிறார். முழுமையாக கறுமை ஆவதில் அரைகல்பம் பிடிக்கிறது. மேலும் வெண்மை ஆவதில் ஒரு விநாடி. குழந்தைகளுக்கு நாடகத்தின் முதல் இடை கடையின் நினைவு வந்துள்ளது. மற்ற தர்மத்தினருக்கு நினைவிற்கு வர முடியாது. மறதியும் உங்களுக்கு ஏற்பட்டது. நினைவும் உங்களுக்கு வந்தது. நீங்கள் தெய்வீக இராஜ்ய ஸ்தானத்திற்கு அதிபதியாக இருந்தீர்கள். இங்கு இராஜாக்கள் ஏராளமாக இருந்தார்கள். எனவே, இராஜஸ்தான் என்று பெயர் வைத்துள்ளார்கள். இப்பொழுது இது குடியரசு ஆட்சி ஆகும். இப்பொழுது நீங்கள் மகாராணி மகாராஜா ஆவதற்கான முயற்சி செய்து கொண்டிருக் கிறீர்கள். நாடகத் திட்டப்படி அவ்வாறே ஆகி இருந்தது. சொர்க்கம் சக்கரம் சுற்றி நரகமாக ஆகிறது. இப்பொழுது நீங்கள் நாபாக் - தூய்மையற்ற இடத்திலிருந்து பாக்-ஸ்தான் - தூய்மையான இடத்திற்கு சென்று ஆட்சி புரிவதற்கான முயற்சியை செய்து கொண்டிருக்கிறீர்கள். உங்களது படிப்பு எளிமையானதாகும். அல்ஃப், பே-ஐ (தந்தை மற்றும் ஆஸ்தி) நினைவு செய்ய வேண்டும். என் ஒருவனை நினைவு செய்தீர்கள் என்றால் உங்களது விகர்மங்கள் விநாசம் ஆகும் என்று பாபா கூறுகிறார். இராஜ்யத்தை நினைவு செய்தீர்கள் என்றால் இராஜ்யம் கிடைக்கும். அவர்கள் கூறுகிறார்கள் - நான் எருமை ஆவேன், நான் எருமை ஆவேன்.. இந்த வி^யங்களெல்லாம் உண்மை கிடையாது. ஆத்மாவாகிய நீங்கள் நான் விஷ்ணு ஆகிறேன் என்று கூறுகிறீர்கள். எப்படி ஆகிறீர்கள்? கூறுகிறார் - என்னை நினைவு செய்யுங்கள். மேலும் விஷ்ணுபுரியின் இராஜதானியை கூட நினைவு செய்யுங்கள். இல்லற மார்க்கம் ஆன காரணத்தால் விஷ்ணுவின் பெயர் எடுக்கப்படுகிறது. அங்கு கூட இலட்சுமி நாராயணரின் சிம்மாசனத் திற்குப் பின்னால் விஷ்ணுவின் படத்தின் அடையாளம் இருக்கும். படங்களில் கூட இவ்விதமாக அமைக்கிறார்கள். பாபா இரகசியத்தைப் புரிய வைத்துள்ளார் - அங்கு இது போல பழக்க வழக்கங்கள் இருக்கும். பிறகு அந்த இலட்சுமி நாராயணர் சக்கரம் சுற்றி வந்து பிரம்மா

சரஸ்வதி அல்லது ஜகத்பிதா ஜகதம்மா ஆகிறார்கள். பிரம்மாவிற்கு கிரேட் கிரேட் கிராண்ட் ஃபாதர் என்று கூறுகிறார்கள். சிவனுக்கு ஃபாதர் (தந்தை) என்று கூறுவார்கள். எல்லா ஆத்மாக்களும் சகோதரர்கள் ஆவார்கள். கிரேட் கிரேட் கிராண்ட் ஃபாதர் மனிதர் ஆகிறார்கள். எனவே இப்பொழுது தேக அபிமானத்தை நீக்கி ஆத்ம அபிமானி ஆக வேண்டும். ஆத்ம அபிமானி (ஆத்ம உணர்வுடையவர்களாக) பரமாத்மா தந்தை ஆக்குகிறார். இங்கு உங்களுக்கு டபுள்லைட் இருக்கிறது. நாலேஜ் இருக்கிறது. ஆத்ம அபிமானியும் ஆகிறீர்கள். பிறகு தந்தையையும் நினைவு செய்கிறீர்கள். ஏனெனில் ஆஸ்தி எடுக்க வேண்டி உள்ளது. தேவதைகள் முயற்சி செய்து முந்தைய பிறவியில் தந்தையிடமிருந்து ஆஸ்தி எடுத்துள்ளார்கள். அவர்கள் நினைவு செய்ய வேண்டிய அவசியம் இல்லை. எனவே குழந்தைகள் புதுப் புது பாயிண்ட்ஸ் புத்தியில் தாரணை செய்ய வேண்டும். வழிமுறைகளோ நிறைய கிடைத்துக் கொண்டே இருக்கிறது. உயர்ந்ததிலும் உயர்ந்த இடம் என்ற விஷயத்தை முதன் முதலில் புத்தியில் பதிய வையுங்கள். உயர்ந்த இடம் நிர்வாண தாமம் ஆகும். ஆத்மாக்களாகிய நாம் நிர்வாணதாமத்தில் வசிப்பவர்கள் ஆவோம். பரமபிதா பரமாத்மா உயர்ந்ததிலும் உயர்ந்தவர் ஆவார். அவருடையது உயர்ந்ததிலும் உயர்ந்த ஸ்தானம் ஆகும். உயர்ந்ததிலும் உயர்ந்த பெயர் ஆகும். உயர்ந்ததிலும் உயர்ந்தது அவரது மகிமை ஆகும். அவர் வந்திருப்பதும் பாரதத்தில் தான். அதனால் தான் இங்கு நினைவார்த்தம் அமைந்துள்ளது அல்லவா? யாருக்கு பெயர் ரூபம் இல்லவே இல்லையோ, அந்த பொருளை பூஜிக்கும் வகையில் அது எப்படி ஆகும்? எனவே இதுவும் தவறு ஆகும் அல்லவா? பரமாத்மாவை பெயர் ரூபத்திற்கு அப்பாற் பட்டவர் என்று கூறுவது - இதுவோ அறியாமை ஆகி விட்டது. சிவராத்திரி கூட பாரதத்தில் கொண்டாடுகிறார்கள். பாரதம் தான் பழைமையான சத்யுகமாக இருந்தது. இப்பொழுது இல்லை. எனவே அவசியம் தந்தை தான் சத்யுகத்தின் ஸ்தாபனை செய்திருக்கக் கூடும். பிறகு துக்கம் யார் கொடுக்கிறார்கள்? எப்பொழுதிலிருந்து துக்கம் ஆரம்பமாகியது என்பது யாருக்கும் தெரியாது. தந்தை வந்து புரிய வைக்கிறார். இப்பொழுது அந்த 21 தலைமுறைக்கான எல்லையில்லாத ஆஸ்தியை உங்களுக்கு அளிக்க வந்துள்ளேன். நீங்கள் கல்ப கல்பமாக இந்த முயற்சியை செய்துள்ளீர்கள். எல்லையில்லாத சுகத்தின் ஆஸ்தியை எல்லையில்லாத தந்தையிடமிருந்து எடுத்துள்ளீர்கள். இது கடைசி பிறவியாக இருக்கும் பொழுது ஏன் தூய்மையாக ஆகி வருங்காலத்திற்காக முழு ஆஸ்தியை எடுக்கக் கூடாது. பக்தர்கள் பகவானை நினைவு செய்கிறார்கள் என்றால் அவசியம் ஆஸ்தி பெறுவதற்காகத் தான். பகவான் இருப்பதே பதீத பாவனராக, சத்கதி அளிக்கும் வள்ளலாக. நரனிலிருந்து நாராயணராக ஆக்குபவராக. வேறு யாருமோ அவ்வாறு ஆக்க முடியாது. சத்யுகத்தில் சட்டென்று இலட்சுமி நாராயணரின் இராஜ்யம் ஆகிறது என்றால் அவசியம் முந்தைய ஜென்மத்தில் முயற்சி செய்துள்ளார்கள் என்று கூறுவார்கள். எனவே வருங்காலத்தில் அப்பேர்ப்பட்ட பதவியைப் பெறுவதற்காக தந்தை இப்பொழுது உங்களை முயற்சி செய்விக்கிறார். பதீதமான உலகத்தின் கடைசியில் தான் வந்து பாவனமாக ஆக்குவார் அல்லவா? அது நிர்விகாரி உலகம் ஆகும். பிறகு கலைகள் குறைந்து கொண்டே போகின்றன. இப்பொழுது இருப்பது விகார உலகம்.

இந்த 5 விகாரங்களை தானம் செய்து விடுங்கள். மேலும் தூய்மையாக ஆகுங்கள் என்று தந்தை கூறுகிறார். நினைவும் செய்யுங்கள். மேலும்

பவித்திரமாகவும் ஆகுங்கள். ஹோலியாகி, இராஜயோகி ஆகுக! - தூய்மையாக இருங்கள் மற்றும் இராஜயோகியாக இருங்கள். இல்லற விவகாரங்களில் இருந்தபடியே ஒரு சிவபாபாவை நினைவு செய்யுங்கள். மேலும் எப்பொழுதாவது வேறு யாரையாவது நினைவு செய்தீர்கள், என்றால் விலைமாதர் ஆகி விட்டீர்கள். பக்தி மார்க்கத்தில் இல்லற விவகாரங்களில் இருக்கையிலும் சில சமயம் ஒருவரை, சில சமயம் மற்றொருவரை நினைவு செய்கிறார்கள். எனவே அது கலப்படமான நினைவு ஆகி விடுகிறது. மேலும் அவர்கள் தூய்மை யாகவும் இருப்பதில்லை. எனவே இல்லற விவகாரங்களில் இருக்கையிலும் தந்தையாகிய என் ஒருவனையே நினைவு செய்யுங்கள் என்று தந்தை கூறுகிறார். இந்த கடைசி பிறவியில் என் பெயரில் தாமரை மலருக்குச் சமானமாக தூய்மையாகி என்னை மட்டும் நினைவு செய்து கொண்டே இருங்கள். இந்த ஒரு பிறவியில் எனக்கு உதவியாளர் ஆகுங்கள். யார் உதவி செய்வார்களோ அவர்களே பலனை பெறுவார்கள். நீங்கள் ஈசுவரிய இறைத் தொண்டர்கள் ஆகி விட்டீர்கள். தந்தை சுயம் பாரதத்திற்கு சேவை செய்கிறார் அல்லவா? குழந்தைகளே நீங்கள் லாயக்காக ஆக வேண்டும் என்று தந்தை கூறுகிறார். குணங்களும் அவசியம் வேண்டும். இங்கு குணவானாக ஆக வேண்டும். பிறகு 21 பிறவிகளுக்கு தேவதை ஆகி ஆட்சி புரிவீர்கள். கிருஷ்ணரின் படம் மிகவும் நன்றாக உள்ளது என்று பாபா புரிய வைத்துள்ளார். நரகத்தை எட்டி உதைக்கிறார். சொர்க்கம் கையில் உள்ளது. பாரதத்தில் தான் இந்த நியமம் உள்ளது. யாராவது இறந்து விட்டார் என்றால், முகம் நகரத்தை நோக்கி, கால் சுடுகாட்டை நோக்கி வைக்கிறார்கள். பிறகு சுடுகாட்டிற்கு பக்கத்தில் வரும் பொழுது முகத்தைத் திருப்பி சுடுகாடு பக்கம் வைக்கிறார்கள். இப்பொழுதோ நீங்கள் உயிருடன் இருந்தே செல்வதற்காகத் தயாராகி உள்ளீர்கள். எனவே உங்கள் முகம் புது உலகத்தை நோக்கி இருக்க வேண்டும். சாந்தி தாமம் வழியாக சுகதாமம் செல்ல வேண்டும். இது எல்லையில்லாத விஷயம் ஆகும். பழைய உலகத்தை எட்டி உதைத்து கொண்டிருக்கிறீர்கள். புதிய உலகத்திற்குச் சென்று கொண்டிருக்கிறீர்கள். எனவே துக்கதாமத்தை மறக்க வேண்டி உள்ளது. சுகதாமம் மற்றும் சாந்திதாமத்தை நினைவு செய்ய வேண்டும். துக்க தாமத்தில் நீங்கள் இருந்தாலும் நினைவு அதனை செய்யுங்கள். கலப்படமற்ற (அவ்ய பிசாரி) யோகம் வேண்டும். ஒரே ஒரு தந்தையை அடுத்து வேறு யாருமில்லை! விளக்கமோ மிகவும் சுலபமாக நல்லதாக கிடைக்கிறது. அர்ஜுனன் நிறைய சாஸ்திரம் படித்திருந்தார். ஆக இவை அனைத்தையும் மறந்து விடு. மேலும் கற்பிப்பவர்களையும் மறந்து விடு என்று அவருக்குக் கூறினார்கள். தந்தையும் அவ்வாறே கூறுகிறார். இப்பொழுது எதெல்லாம் கேட்டிருக்கிறீர்களோ அனைத்தையும் மறந்து விடுங்கள். நான் உங்களுக்கு அனைத்து சாஸ்திரங்களின் சாரத்தைப் புரிய வைக்கிறேன். உண்மையான கண்டத்திற்கு அதிபதியாக ஆக்குகிறேன். அவர்கள் உங்களை பொய்யான கண்டத்திற்கு அதிபதியாக ஆக்குகிறார்கள். இப்பொழுது நான் சரியா, இல்லை அந்த உங்களுடைய சிற்றப்பா, மாமா அல்லது சாஸ்திரவாதிகள் சரியா? என்று நீங்களே தீர்மானியுங்கள் என்று தந்தை கூறுகிறார். அந்த யுத்தம் எல்லைக்குட்பட்டது. உங்களுடையது எல்லையில்லாதது. இதன் மூலம் நீங்கள் எல்லையில்லாத இராஜ்யத்தைப் பெறுகிறீர்கள். இந்த விகாரங்களை இப்பொழுது தானமாக கொடுத்து விடுங்கள் என்று தந்தை கூறுகிறார். இப்பொழுது முயற்சி செய்யவில்லை என்றால் மிகவும் பச்சாதாபப்படுவீர்கள். எனவே கவனக் குறைவாக இருப்பதை விடுங்கள். சேவையில் ஈடுபட்டு

விடுங்கள். (கல்யாணகாரி) நன்மை செய்பவராக ஆகுங்கள். இந்த கலியுகத்தில் மகான் துக்கம் உள்ளது. இப்பொழுதோ இன்னுமே நிறைய துக்கத்தின் மலைகள் விழப் போகின்றன. பிறகு சத்யுகத்தில் தங்க மலைகள் நின்று விடும். நல்லது.

இனிமையிலும் இனிமையான காணாமல் போய் வெகுகாலம் கழித்து கண்டெடுக்கப்பட்ட செல்லமான குழந்தைகளுக்கு தாயும் தந்தையுமாகிய பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் காலை வணக்கம். ஆன்மீகக் குழந்தைகளுக்கு, ஆன்மீகத் தந்தையின் நமஸ்காரம்.

தாரணைக்கான முக்கிய சாரம்:

1. அல்ஃப் (தந்தை) மற்றும் பே அரசாளும் இராஜ்யத்தை நினைவு செய்வதற்கான எளிய படிப்பை கற்க வேண்டும் மற்றும் கற்பிக்கவும் வேண்டும். கலப்படமற்ற நினைவில் இருக்க வேண்டும். இந்த பொய்யான கண்டத்தை புத்தி மூலமாக மறந்து விட வேண்டும்.

2. இறை சேவகர்களாக ஆகி பாரதத்தை நாபாக் - தூய்மையற்ற நிலையிலிருந்து பாக் – தூய்மை யானதாக ஆக்கக் கூடிய சேவை செய்ய வேண்டும். தந்தைக்கு முழுமையாக உதவியாளர் ஆக வேண்டும்.

வரதானம் : ஒவ்வொரு நொடியையும் கடைசி நொடி எனப்புரிந்து கொண்டு எப்பொழுதும் எவரெடியாக இருக்க கூடிய தீவிர முயற்சியாளர் ஆகுக.

எந்த குழந்தைகள் தீவிர முயற்சியாளர்களாக இருக்கிறார்களோ, அவர்கள் ஒவ்வொரு நொடியும் கடைசி நொடியாக புரிந்து கொண்டு எவரெடியாக இருப்பார்கள். விநாசம் ஆவதற்கு சில காலங்கள் ஆகும், பிறகு தயாராகிக் கொள்ளலாம் என்று யோசிக்காதீர்கள். அந்த கடைசி நொடியை (எதிர்பார்ப் பதற்கு) பார்ப்பதற்கு பதிலாக தனது கடைசி நிமிடத்திற்கு எந்தவிதமான நம்பிக்கையும் இல்லை என்று யோசியுங்கள். ஆகையால் எவரெடி, தனது மனநிலை சதா உயர்ந்த நிலையில் இருக்கும். அனைத் திலிருந்தும் விடுபட்டும் பாபாவிடமிருந்து அன்பானவராகவும், பற்றற்றவராகவும் இருங்கள். சதா பற்றற்றவராகவும் நிர்விகல்ப, வீணானது இல்லாதவராகவும், வீணானது இல்லாத பொழுது தான் எவரெடி என்று சொல்ல முடியும்.

சுலோகன்: நெருக்கடியான காலகட்டத்தில் பாஸ் வித் ஆனர் (தகுதியுடன் தேர்ச்சி பெறுதல்) வேண்டுமென்றால் சகித்துக் கொள்ளும் தன்மையை அதிகரியுங்கள்.